[6th August 1966

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) & (இ) ஆம். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம் வட்டங்களில் களிக்கல் (Gypsum) படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பொள்ளாச்சி, பல்லடம் சாலைக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளில் இக்களிக்கல் படிவங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. அடுத்துள்ள பல்லடம், உடுமலைப்பேட்டை வட்டங்களிலும் இக்களிக்கல் படிவங்கள் ஆங்காங்கே திட்டு திட்டாகக் காணப்படுகின்றன. பல்லடம் பகுதியில் ஏறக்குறைய 56,000 டன் களிக்கல் படிவங்கள் கிடைக்கும் எனவும், பொள்ளாச்சி வட்டத்தில் ஏறக்குறைய 28,000 டன் களிக்கல் படிவங்கள் இருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கிடைக்கும் களிக்கல் கொண்டு போர்ட்லண்டு சிமிட்டி, உரங்கள், பாரிஸ் உறை மாவு (Plaster of Paris) போன்ற பொருள்களைத் தயாரிக்கலாம்.

திரு. வை. சங்கரன் : இதைப் பயன்படுத்தி ஏதாவது சிமென்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ? அப்படி என்ருல், அதன் கபாசிட்டி என்ன இருக்கும் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இப்போதுதான் ப்ரிலிமினரி வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. பிறகுதான் இதைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.

*** 174 Q.—Sri V. SANKARAN :** Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether and multimetal ore deposits including iron, nickel, and copper have been found, in Mangamalai area in Kanyakumari district; and

(*b*) if so, whether any survey has been made to estimate the quantity of the respective metals available thereof?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) & (இ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் அருமநல்லூர் அருகில் மாங்காமலைப் பகுதியில் சல்பைடு இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டு, 1965 ஜனவரி-மே மாதங்களில் இந்தியப் புவியியல் ஆராய்ச்சியினரால் விரிவாகப் புலனாய்வு செய்யப்பட்டது. இக் கனி வகைகள் இங்கு இருப்பதாக இப்புலனாய்வின்மூலம் தெரிய வந்தது. இன்னும் கனிமூலப் பொருளின் தன்மை, அது எவ்வளவு ஆழம் தொடர்ந்து உள்ளது ஆகியவற்றை ஆராய்ந்தறியும் வேலையை மாநிலப் புவியியல் ஆராய்ச்சிக் கிளை மேற்கொண்டுள்ளது. வேலை நடந்தேறி வருகிறது.

திரு. வை. சங்கரன் : சார், சமீபத்திலே மாமன்டூர் பகுதியில் இந்தமாதிரி இருந்தபோது ஜப்பானியரைக் கொண்டு ஆராய்ந்த மாதிரி அவர்களைக்கொண்டே அதையும் ஆராய ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த விவரங்கள் இப்போது இங்கு இல்லை.

Striking of oil at Nagercoil

* 175 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact oil has been struck in two wells near the State Bank Building at Nagercoil;

(*b*) if so, whether any analysis of the samples was made; and

(*c*) the results thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

தேசிய கீதம்

* 176 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபைக் கூட்டங்களின் இறுதியில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என மதுரை நகரசபை அண்மையில் ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) நகரமன்றக் கூட்டங்களின் இறுதியில் தேசிய கீதம் பாடுவது உசிதமல்ல என்று சர்க்கார் நகரமன்றத்திற்குத் தெரிவித்துள்ளது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, அப்படி இருக்கிற போது சினிமாக் காட்சிகள் முடிவுறும்போது கட்டாயமாகத் தேசிய கீதம் பாடப்படவேண்டும், அதைக் கேட்டுத்தான் வெளியேற வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பானேன் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகர மன்றங்கள் ருட்டின் மாட்டர்சுக்காகக் கூடுகிறார்கள். சட்ட மன்றங்களிலே, பாராளு மன்றத்திலே, மேல் சபையிலே எல்லாம் நிகழ்ச்சிகளுக்காகக் கூடுகிறார்கள். பொது மக்கள் கூடும் இடங்களில் மக்களுக்குத் தேசிய உணர்வை ஏற்படுத்துவதற்காக, மக்களுடைய பண்பாட்டுக்காகக் கொண்டுவருவதை ஒப்பிடுவது முறையல்ல.